

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்



**மின்னிதழ்** **டிசம்பர் 2025**



## செயலர் பக்கம்

### அருள்பணி. சு. மரிய சூசை

### அன்பு உறவுகளே!

உலகம் முழுவதும் கிறிஸ்து இயேசுவின் திருப்பிறப்பை பெருமகிழ்வோடு இம்மாதம் 25 ஆம் நாள் கொண்டாடி மகிழ்கிறோம். 'இம்மானுவேல்" என்னும் பெயரோடு கடவுள் மனிதரோடு உறவாட, ஒரு மனிதராகவே வந்திட்ட மாபெரும் மீட்புக் கொண்டாட்டம் இது. கிறிஸ்துமஸ் என்றாலே கிறிஸ்துமஸ் தாத்தாவும், அவர் தருகிற பரிசும் நம் நினைவுக்கு நிச்சயமாக வரும். கிறிஸ்துமஸ் பெருவிழாவே ஒரு பரிசுப் பெருவிழாதான். ஏனென்றால் விண்ணகத் தந்தை தம் ஒரே மகன் இயேசுவையே இகத்தில் வாழும் மாந்தர் அனைவருக்குமான பேரின்பப் பரிசாக அளித்து மகிழ்ந்தார். அந்த இயேசுவும் தம்மையே அனைவருக்குமான, ஏன் இன்னும் கூடுதலாக, தம் பகைவருக்குமான அன்புப் பரிசாக அளித்து மகிழ்ந்தார். இவ்வாறு கிறிஸ்துவே பரிசாகிய பெருவிழாவே கிறிஸ்து பிறப்பு பெருவிழா. நாமே அடுத்தவருக்கான கிறிஸ்துமஸ் பரிசாக மாறுவதே, இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை இன்னும் அதிக அர்த்தமும் அழகும் உள்ளதாக மாற்றும்.

## இனிய கிறிஸ்து பிறப்பு பெருவிழா வாழ்த்துகள்!



#31

# அடையாளச் சின்னம் -விளக்கம்

## பகுதி-1

யூபிலியின் கருப்பொருளை அனைவரும் புரிந்துகொள்ளும் விதமாக இவ் ஓவியம் மிகவும் எளிமையானதாக அமைந்துள்ளது.

மனித இனம் முழுவதையும் அடையாளப்படுத்தும் விதமாக உலகின் நான்கு மூலைகளிலிருந்தும் நான்கு அழகான மனித உருவங்களைக் கொண்டுள்ளது.

ஒருவரையொருவர் அரவணைத்துச் செல்லவும், உலக மக்களை ஒன்றிணைக்கவும் வேண்டிய ஒற்றுமையையும், உடன் பிறந்த உணர்வு நிலையையும் எடுத்துக்காட்டுகிறது.

மனித குலத்தின் பன்முகத்தன்மையை குறிக்கவும், மனித அனுபவத்தின் பல்வேறு அம்சங்களைக் குறிக்கவும், நான்கு மனித உருவங்கள் வெவ்வேறு வண்ணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு

சிவப்பு -மனித குலத்தின் மீது கடவுளுக்கு இருக்கும் எல்லையில்லா அன்பையும், மனிதனின் செயல்பாட்டையும், பகிர்வு மனப்பான்மையையும் குறிக்கிறது.

மஞ்சள் - மனித அரவணைப்பையும், மகிழ்ச்சியையும், நம்பிக்கையின் பாதையை ஒளிரச் செய்யும் ஒளியையும் குறிக்கிறது.

பச்சை-அமைதி, சமநிலை, நம்பிக்கை, வளர்ச்சி மற்றும் மறுபிறப்பை குறிக்கிறது.

நீலம்- பாதுகாப்பு, ஆன்மீகம், ஆழ்ந்த சிந்தனை மற்றும் செபத்தையும் குறிக்கிறது

#32

# அடையாளச் சின்னம் -விளக்கம்

## பகுதி-2

‘கிறிஸ்துவின் மீதான நம்பிக்கையால் ஒன்றுப்பட்ட மக்கள், "எதிர்நோக்கின் காற்றினால்" உந்தப்பட்டு முன்னோக்கி செல்கின்றார்கள்’, என்ற சிந்தனையில் இந்த ஓவியத்தை வரைந்ததாக ஓவியக் கலைஞர் குறிப்பிடுகிறார்.

இயேசு கிறிஸ்து, சிலுவையின் வழியாக நமக்கு மீட்பளிக்கின்றார் என்ற கருத்தே இந்த எதிர்நோக்கின் காற்று.

ஓவியத்தில் முதலில் இருக்கும் உருவம் சிலுவையைப் பிடித்து கொண்டிருப்பதாக நாம் காண்கின்றோம்.

இங்கு சிலுவை கிறிஸ்தவத்தை குறிக்கும் ஓவியமாக மட்டுமல்லாமல், ஒரு போதும் கைவிட முடியாத நம் எதிர்நோக்கின் அடையாளமாகவும் உள்ளது.

நம் வாழ்க்கைப் பயணம், எப்போதும் அமைதியான நீரில் சீராகச் செல்வதில்லை.

கோவிட் தொற்றின் காரணமாக உலகில் அப்போது நிலவிய நிச்சயமற்ற தன்மை, இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் போர்ச் சூழல்கள், தனிப்பட்ட வாழ்வில் இருக்கும் சவால்கள், குழப்பங்கள் முதலிய அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலைகள் மற்றும் உலகின் நிகழ்வுகள் ஆகியன, உருவங்களின் கீழ் கரடுமுரடான அலைகளால் சித்தரிக்கப்படுகின்றது .

இப்படிப்பட்ட நமது மிகப்பெரிய தேவையின் தருணங்களில் நமக்கு எப்போதும் எதிர்நோக்கு தேவை என்பதை இந்த ஓவியம் உணர்த்துகின்றது.

#33

# அடையாளச் சின்னம் -விளக்கம்

பகுதி-3

ஓவியத்தில் காண்கின்ற சிலுவை நேராக வடிவமைக்கப்படவில்லை. அதன் கீழ்ப் பகுதியை நாம் கவனித்தோமானால், அது நீளமாக கடல் அலைகளில் விடப்படும் ஒரு நங்கூரத்தின் வடிவம் போல அமைக்கப்பட்டுள்ளது.

நங்கூரம் என்பது ஓர் எதிர்நோக்கின் சின்னம். நீரில் பயணிக்கும் அனைத்து வாகனங்களுக்கும் முக்கியமானதும் முதன்மையானதுமாக நங்கூரம் விளங்குகின்றது.

புயல்களின்போது கப்பலை நிலைநிறுத்த நங்கூரம் உதவுகிறது. அதுபோல நம் வாழ்வில் கொந்தளிக்கும் தருணங்களில் நாம் நிலையான நிலையில் இருக்க சிலுவை உதவுகிறது.

கொந்தளிக்கும் வாழ்க்கைத் தருணங்களில் நாம் தனியாக விடப்படவில்லை. மாறாக நாம் தோழமையிலும் சகோதரத்துவத்திலும் கூட்டு முயற்சியோடு, எதிர்நோக்கைக் குறிக்கும் ஒரு சிலுவையை நோக்கி பயணிக்க முடியும் என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது.

இந்தக் கூட்டு முயற்சி அதிகரித்து சுறுசுறுப்பானதும் புதுமையானதுமான செயல்முறையாக மாறி, சிலுவையை நாம் எதிர்கொள்ளும் பலனைத் தருகின்றது.


இவ் ஓவியத்தில் காணப்படும் சிலுவை ஓர் இடத்தில் நிலையாக நின்று விடாமல், மனிதகுலத்தை நோக்கிச் சாய்கின்றது. மனிதர்களைத் தனியாக விடாமல், சாய்ந்து, அதன் இருப்பின் உறுதியையும் எதிர்நோக்கின் பாதுகாப்பையும் வழங்க நம்மோடு இணைகின்றது; உதவியும் வழங்குகின்றது.

# பள்ளி மறைக்கல்வி, நன்னெறிக்கல்வி பொதுத்தேர்வு




2025-2026 ஆம் கல்வியாண்டுக்கான 9 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்கு நவம்பர் இறுதி வாரத்தில் அவரவர் பள்ளிகளிலேயே மறைக்கல்விக்கும் நன்னெறிக்கல்விக்கும் பொதுத்தேர்வு நடத்தப்பட்டது. இதில் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் மாணாக்கர் வரும் டிசம்பர் 5ஆம் தேதி மறைமாவட்ட அளவிலான சிறப்புத் தேர்வில் பங்கெடுப்பர்.





# அசாதாரண நற்கருணைப் பணியாளர்களுக்கான திருவழிபாட்டுக் கருத்தரங்கு

திருச்சி மறைமாவட்டத்திற்குள் பணியாற்றும் துறவற அருள்சகோதரர்களுக்கும் அருள்சகோதரிகளுக்கும் மேலப்புதூர் புனித அன்னாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் திருவழிபாட்டுக் கருத்தரங்கு நவம்பர் 23 ஆம் நாள் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் நம் மறைமாவட்ட ஆயர் மேதகு. ஆரோக்கியராஜ் அவர்கள் அசாதாரண நற்கருணைப் பணியாளர்களுக்கான வழிகாட்டுதல்கள் பற்றியும், தமிழக திருவழிபாட்டுப் பணிக்குழுச் செயலர் அருள்பணி. எம்மானுவேல் அவர்கள் திருப்பலிக்கான தகுந்த தயாரிப்புகள் பற்றியும், அருள்பணி. மரியசூசை அவர்கள் நற்கருணையின் அடிப்படை இறையியல் கூறுகள் பற்றியும் கருத்துரைகள் வழங்கினர். பிற்பகலில் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து பங்கேற்பாளர்களுக்கான சான்றிதழும், அசாதாரண நற்கருணைப் பணியாளர்கள் நற்கருணை வழங்கும்போது கழுத்தில் அணிவதற்கான பதக்கமும் ஆயரால் வழங்கப்பட்டன. இக்கருத்தரங்கில் 31 துறவற சபைகளிலிருந்து 360 நபர்கள் பங்கேற்றனர்.






SILVER JUBILEE BLOCK _ 1975



# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்









# தன்னார்வ வேதியர்களுக்கான திரைப்படக் காட்சி






அண்மையில் திரையரங்குகளில் வெளிவந்த முகமற்றோரின் முகம் என்னும் அருள்சகோதரி ராணி மரியா அவர்களது வாழ்க்கையை எடுத்துரைக்கும் திரைப்படத்திற்கு தன்னார்வ வேதியர்களும் அவர்களுடைய உறவுகளும் செயலரால் ஒருங்கிணைக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். 21.11.2025 அன்று மாலை சோனா மீனா திரையரங்கில் மாலை 6.45 மணிக் காட்சிக்கு மறைமாவட்ட ஆயர், முதன்மை குரு, சில அருள்பணியாளர்கள், தன்னார்வ வேதியர்கள் என்று மொத்தம் 125 நபர்கள் சென்றனர். கிறிஸ்தவ வாழ்வின் அர்த்தத்தையும் அழகையும் அருள்சகோதரியின் வாழ்விலிருந்து கற்றுக்கொள்ள இப்படம் தூண்டுதலாய் அமைந்தது எனக் கூறி மகிழ்ந்தனர்.





# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்



## கல்லறைகள், அருங்காட்சியகங்கள் சந்திப்பு

30.11.2025 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு தன்னார்வ வேதியர்கள் இணைந்து, திருச்சி மறைமாவட்டத்தில் உழைத்து மரித்த ஆயர்கள், குருக்கள் ஆகியோரின் கல்லறைகளைச் சந்தித்து, அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்து, செபமாலை ஒப்புக்கொடுத்தனர். அதனைத் தொடர்ந்து நம் திருச்சி மண்ணில் பிறந்த துறவற சபைகளான திருச்சி புனித அன்னாள் சபை, புனித வியாகுல அன்னையின் மரியின் ஊழியர் சபை ஆகியவற்றின் அருங்காட்சியகங்களைக் கண்டு, அவர்களுடைய வரலாற்றை அறிந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகள் செய்துதந்த அருள்சகோதரிகளுக்கு நன்றிகள்.










# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்

















SERVICE
அன்பு







கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்



# 2 படங்களுக்கு இடையேயுள்ள 6 வித்தியாசங்களை கண்டுபிடித்து மகிழுங்கள்



திருமுழுக்கு யோவானின் பிறப்பு

